## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 85/2019 | Date : 17.08.2023 | PW2 |
|---|---|---|
| Name: ராஜேந்திரன் | த/பெ. **அம்மாசி கவுண்டர்** | |
| Evidence Recorded Time: 12.26 P.M. to 12.40 P.M | | |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-**

நான் அம்மாசி கவுண்டரின் இளைய மனைவியின் வாரிசு என்று வாரிசு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் கதவு எண்.203/பி, சக்திநகரில் குடியிருந்து வருகிறேன். எனது அப்பா யாருடன் வசித்து வருகிறார் என்றால் அப்பா கடந்த 2018-ம் ஆண்டு இறந்துவிட்டார். நான் குடியிருக்கும் இடத்திற்கும் வா.சா.1 எனது அண்ணன் குடியிருக்கும் இடத்திற்கும் எவ்வளவு துாரம் என்றால் ஒரு கி.மீ துாரம் இருக்கும். எனது அண்ணனுக்கு இந்த தாவா சொத்தை தவிர்த்து வேறு நிலங்கள் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 37/1D1 ஆகும். மேற்படி சர்வே எண்ணில் எவ்வளவு மொத்த விஸ்தீரணம் எவ்வளவு நிலம் உள்ளது என்றால் தெரியாது, என் அண்ணன் 1091 1/4 சதுர நிலத்தை வாங்கினார். நீள, அகலம் எத்தனை அடியில் உள்ளது என்றால் தெரியாது. வாதி கிரையம் வாங்கிய கிரைய பத்திரத்தில் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதிக்கு விற்பனை செய்த நபர்களுக்கு இடம் எப்படி அவர்களுக்கு பாத்தியப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. கிரைய பத்திரத்தில் மேற்படி 1091 1/4 சதுர நிலத்திற்கு வா.சா.ஆ.1 ஆவணத்தில் என்ன சக்குபந்தி கண்டு எழுதியுள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதி பணம் கொடுத்து கிரையம் வாங்கியுள்ளதாக சொல்லியுள்ளேன், அவ்வாறு வாதி பணம் கொடுத்து கிரையம் வாங்கியது எனக்கு நேரில் தெரியுமா என்றால் தெரியாது, சொல்லி தெரியும். கிரையம் வாங்கிய பிறகு என் அண்ணனுக்கு எப்போது எந்த தேதியில் நிலத்தின் சுவாதீனத்தை ஒப்பபடைத்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. 17.12.2019-ம் தேதியில் தாவா சொத்தில் சுவாதீனத்தில இருந்தபோது யார் யார் வந்து இடைஞ்சல் செய்தார்கள் என்றால் கிருஷ்ணம்மாள், கிருஷ்ணம்மாள் மகள், மருமகள் மற்றும் சிலர் வந்து பிரச்சனை

செய்தார்கள். கிருஷ்ணம்மாளின் மகள், மருமகள் பெயர்கள் தெரியுமா என்றால் தெரியாது. பெயர்களை தெரிந்து கொள்ள முயற்சி செய்தேனா என்றால் இல்லை. பிரதிவாதிகள் பிரச்சனை செய்ததது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் கொடுத்தோம், அதன் பின்பு ஊர் பெரியவர்களை வைத்து பஞ்சாயத்து பேசினோம். யார் யார் பஞ்சாயத்தில் கலந்துகொண்டார்கள் என்றால் தெரியாது. தாவா சொத்திற்கு வடக்குபக்கம் ஈஸ்வரி என்பவர் நிலத்தை வாங்கி வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. வாதி என் அண்ணன் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதன் பேரில் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

ஒம்/–PW2,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.